[2020] 9 எஸ்.சி.ஆர். 472

சகுபா அகமது மற்றும் பலர்

-எதிர்-

அப்பர் அசாம் ப்ளைவுட்ஸ் ப்ராடெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.3007-3008/2020)

செப்டம்பர் 18, 2020

மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு. எஸ். ஏ. போப்டே

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ. எஸ். போபண்ணா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. வி. ராமசுப்பிரமணியன்

நிறுமச் சட்டம், 1956

பிரிவு 421(3) வரம்புரை - 45 நாட்களுக்கு மேல் காலதாமதம் - மேல்முறையீடு தாக்கல் செய்வதில் - தேசிய நிறுமச் சட்ட தீர்ப்பாய உத்தரவிற்கெதிராக - கால தாமதத்தை மன்னிப்பதற்காகவும்; மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட மேல்முறையீட்டிற்கெதிரான விண்ணப்பம் - உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு - முடிவு : மேல்முறையீட்டு தீர்ப்பாயம் 45 நாட்கள் கால தாமதத்தை மட்டுமே மன்னிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, கோவிட் -19 பெருந்தொற்று காரணமாக காலவரம்பு

உச்சநீதிமன்றத்தால் நீட்டிக்கப்பட்ட உத்தரவை கருத்தில் கொண்டு 45 நாட்களுக்கு மேல் கால தாமதத்தை மன்னிக்க முடியாது.

சட்ட முதுமொழி :

'விழிப்புடன் இருப்பவர்களுக்கு மட்டுமே சட்டம் உதவும், தங்களது உரிமைகளை குறித்து கருத்தில் கொள்ளாமல் இருப்பவர்களுக்கு அல்ல' - பொருந்தும் தன்மை.

காலவரையறை சட்டம், 1963 :

பிரிவு 4 - சொற்றொடர் "வரையறுக்கப்பட்ட காலம்" என்ற சொற்றொடரின் படி - உட்பொருள் - முடிவு : மேற்சொன்ன சொற்றொடர் வரையறை காலத்தை குறிப்பிடுகிறதே தவிர, ஒரு நபரை வழக்கு தொடுக்க அனுமதிக்கும் நீதிமன்றம்/தீர்ப்பாயத்தின் விருப்புரிமை குறித்த காலத்தை அல்ல.

சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் :

'வரையறுக்கப்பட்ட காலம்' என்ற சொற்றொடர் - 1963, காலவரையறை சட்டம், பிரிவு 4-இல் பொருள் குறிப்பிடப்பட்டது.

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:-

1.1. பாதிக்கப்பட்ட நபருக்கு தீர்ப்பாயத்தின் உத்தரவின் நகல் கிடைக்கப்பெறும் நாளிலிருந்தே பிரிவு 421 (3)-ன்கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாள்களுக்கான வரையறைக் காலமானது தொடங்கும் என்ற மேல்முறையீட்டாளர்களின் வாதம் மெய்யானது. சட்டத்தின் பிரிவு 420 (3) உடனிணைந்த விதி 50-ன்படி, மேல்முறையீட்டாளர்கள் செலவின்றி ஒரு சான்றிடப்பட்ட உத்தரவின் நகல் வழங்கப்பட உரிமையுடையவர்கள்

என்பது உண்மை. எனவே, மேல்முறையீட்டாளர்கள் நகல் மனுதாக்கல் செய்யாமல், ஆனால் பிரிவு 420 (3) உடனிணைந்த விதி 50-ன் வரையறைகளின் படி, உத்தரவின் இலவச நகலுக்காக காத்திருந்தால், காலவரம்பு ஆரம்பிக்கும் நாளை நிர்ணயிக்க, பிரிவு 421 (3) சார்ந்திருப்பது சரியானதாக இருந்திருக்கும். ஆனால், இவ்வழக்கின் மேல்முறையீட்டாளர்கள், அவர்கள் முன்பு உத்தரவு பகரப்பட்ட நாளிலிருந்து 27 நாள்களுக்குப் பின்னர் சான்றிடப்பட்ட நகலுக்கு விண்ணப்பித்துள்ளனர் மற்றும் அவர்கள் தற்போது பிரிவு 421(3)-ஐ சார்ந்து உள்ளனர் என்பதாகும்.

1.2. மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞரால் சான்றிடப்பட்ட நகல் பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொண்ட நாளான 19.12.2019-லிருந்து காலவரம்பு தொடங்குவதை நிறுத்த இயலாது. மேல்முறையீட்டாளர்களின் வழக்குரைஞர் உத்தரவின் நகலைப் பெற்றுக்கொண்ட நாளான 19.12.2019-லிருந்து, மேல்முறையீடு தாக்கல் செய்ய மேல்முறையீட்டாளர்களுக்கு 45 நாள்கள் கால அவகாசம் உள்ளது. அந்தக் கால அவகாசம் 02.02.2020 உடன் முடிவடைகிறது. பிரிவு 421 (3)-இல் உள்ள வரம்புரை காரணமாக, 45 நாள்கள் காலம் வரை தாமதத்தை மன்னிக்க மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 45 நாள்கள் காலவரம்பு 02.02.2020-லிருந்து துவங்குகிறது மற்றும் மேல்முறையீட்டாளர்களின் கருத்துப்படி அது 18.03.2020 உடன் முடிவடைகிறது. மேல்முறையீட்டாளர்கள் 18.03.2020 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை, ஆனால் 20.07.2020-இல் தான் தாக்கல் செய்துள்ளார். பொதுமுடக்கம் 24.03.2020 அன்றுதான் போடப்பட்டது.

2.1. 18.03.2020 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேல்முறையீடு தாக்கல் செய்யத் தவறியதை சரிக்கட்ட இந்நீதிமன்றம் தாமாக முன்வந்து எடுத்த நீதிப்பேராணை மனு-இல் 23.03.2020 தேதியிடப்பட்ட உத்தரவை சார்ந்துள்ள மேல்முறையீட்டாளர்கள் காலவரம்பு பொதுச்சட்டம் அல்லது சிறப்பு சட்டம் (மத்திய மற்றும் மாநிலம்) கீழ் அல்லது காலவரம்பு பொது சட்டம் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் நாடு முழுதும் அவர்களது மனுக்கள்/விண்ணப்பங்கள்/வழக்குகள்/மேல்முறையீடுகள்/பிற எல்லா நடவடிக்கைகளிலும் நாடு முழுதும் சந்திக்கும் நிலைமை குறித்து இந்நீதிமன்றம் தாமாகவே முன்வந்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. **இந்நீதிமன்றத்தின் மேற்சொன்ன உத்தரவில் நீட்டிக்கப்பட்டது என்னவென்றால் "காலவரம்பு" மட்டுமே மற்றும் சட்டத்தால் உறுதி செய்யப்பட்ட விருப்புரிமையைச் செலுத்துவதில் காலதாமதத்தை மன்னிக்கும் காலத்தையல்ல.** பொது மற்றும் சிறப்பு சட்டங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் நடவடிக்கை தொடர்வதிலிருந்து பெருந்தொற்று மற்றும் பொதுமுடக்கம் காரணமாக தடுக்கப்பட்ட விழிப்புடன் உள்ள வழக்காடிகளுக்கு பயனளிக்கும் விதமாக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மேற்படி உத்தரவு உள்ளது. காலவரையறைச் சட்டம் என்பது இரு லத்தீன் சட்ட முதுமொழியின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றும், அதில் ஒன்று 'Vigilantibus Non Dormientibus Jura Subveniunt' அதன் பொருளானது, 'விழிப்புடன் இருப்பவர்களுக்கு மட்டுமே சட்டம் உதவும், தங்களது உரிமைகளை குறித்து கருத்தில் கொள்ளாமல் இருப்பவர்களுக்கு அல்ல' என்பதாகும். எனவே, காலதாமதத்தை மன்னிக்க கூடிய காலத்தை

நீட்டிப்பதற்காக, இந்நீதிமன்றத்தால் 23.03.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பலனை, மேல்முறையீட்டாளர்கள் கோரமுடியாது.

2.2. பொது வகையங்கள் விளக்கச் சட்டம் 1987, பிரிவு 10-இல் காலக்கணக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பொது வகையங்கள் விளக்கச் சட்டம் பிரிவு 10(1) அடிப்படையாக அமைந்த கொள்கை காலவரையறை சட்டம், 1963 பிரிவு 4-இல் இடம் பெற்றுள்ளது மற்றும் அதில் "நீதிமன்றம் மூடப்பட்டிருந்தால் நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததற்கு வகை செய்யப்பட்டுள்ளது". "நிர்ணயிக்கப்பட்ட காலம்" என்ற சொற்கள் காலவரையறை சட்டம் 1963-இல் பல பிரிவுகளில் காணப்படுகிறது. இந்த சொற்றொடர்களான "நிர்ணயிக்கப்பட்ட காலம்" என்பது காலவரையறை சட்டம், 1963, பிரிவு 2-இல் வரையறுக்கப்படவில்லை, அந்த சொற்கள், காலவரம்பை குறிக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. பிரிவு 4-இல் காணப்படும் "நிர்ணயிக்கப்பட்ட காலம்" என்ற சொற்றொடர், காலவரம்பைத் தவிர வேறு எதனையும் கூறுவதாகக் கருதமுடியாது. நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பைத் தாண்டி, அதில் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் நடவடிக்கை தொடர, ஒரு நபரை அனுமதிக்க விருப்புரிமை வைத்திருப்பதாக 'நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பாக' எடுத்துக்கொள்ள முடியாது.

அசாம் நகர்ப்புற நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் -எதிர்-

சுபாஷ் ப்ராஜெக்ட்ஸ் மற்றும் மார்க்கெட்டிங் லிமிடெட் (2012) 2 **எஸ்.சி.சி 624 : [2012] 1 எஸ்.சி.ஆர் 403 – சார்வுறப்பட்டது.**

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்கள்.3007-3008/2020.

வ.வி.எண்.1771/2020 உடன் நிறும மேல்முறையீடு (மே.தீ) எண்.118/2020-இல் புது டெல்லி தேசிய நிறுமச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தால் (தே.நி.ச.மே.தீ) 04.08.2020 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

சாஜன் பூவய்யா, மூத்த வழக்குரைஞர், குஞ்சன் சிங், சத்ய மித்ரா, சந்திரசேகர் ஏ. சக்கலாபி, அங்குஷ்மன் சர்மா, பிரதிபானு, ரக்ஷா அகர்வால், ஷிவ் குமார் பாண்டே, அவனிஷ் குமார், தி/ள். தர்மபிரபாஸ் லா அசோசியேட்ஸ்-ற்காக அன்ஷூல் ராய் ஆகியோர் தரப்பினர்களுக்க்காக முன்னிலையான வழக்குரைஞர்கள் ஆவர்.

இந்நீதிமன்ற தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. வி. ராமசுப்பிரமணியன் அவர்களால் பகரப்பட்டது.

1. மேல்முறையீடு காலதாமதத்தால் தடை செய்யப்படுகிறது என்றும், காலதாமதத்தை மன்னிக்கக்கோரும் விண்ணப்பத்தை தேசிய நிறுமச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (இதில் இதற்குப் பிறகு தே.நி.ச.மே.தீ எனக் குறிப்பிடப்படும்) தள்ளுபடி செய்து உத்தரவிட்டதன் பேரில், அதை எதிர்த்து மேற்படி மேல்முறையீடுகளை மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்தனர்.

2. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் திரு. குஞ்சன் சிங் மற்றும் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பாக அறிவிப்பை ஏற்றுக்கொண்ட

கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சாஜன் பூவய்யா ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

3. இங்கு 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளராக உள்ள அப்பர் அசாம் ப்ளைவுட்ஸ் ப்ராடெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பெயருள்ள நிறுமத்தின் 24.89 சதவீத பங்குகளை வைத்துள்ளதாக இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் ஒன்றிணைந்து கோரினர், நிறுமத்தை கலைப்பதற்காக தேசிய நிறுமச் சட்ட தீர்ப்பாயத்தின் (இதில் இதற்குப்பிறகு தே.நி.ச.மே.தீ எனக் குறிப்பிடப்படும்) கவுகாத்தி அமர்வு முன்பு மேல்முறையீட்டாளர்கள் விண்ணப்பம் தாக்கல் செய்தனர். மேற்படி விண்ணப்பம் 25.10.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் தே.நி.ச.மே.தீ-ஆல் தள்ளுபடி செய்யப்பட்டது.

4. மேல்முறையீட்டாளர்கள் கூற்றுப்படி, 25.10.2019 நாளிடப்பட்ட தே.நி.ச.மே.தீ-ன் உத்தரவு சான்றிடப்பட்ட நகலைக் கோரி, 21.11.2019-இல் விண்ணப்பித்திருந்தனர். (21.11.2019 அன்று சான்றிடப்பட்ட நகலை கோரி விண்ணப்பித்திருந்ததாக, மேல்முறையீடு குறிப்பாணையில் மேல்முறையீட்டாளர்கள் கோரியிருந்தாலும், இணைப்பு பி-1 ஆக தாக்கல் செய்த நகல் கோரிய மனுவில் 22.11.2019 தேதி உள்ளது)

5. மேல்முறையீட்டாளர்கள் கூற்றுப்படி, 21.11.2019-இல் விண்ணப்பத்தின், நகல் கோரியதின் பேரில், தே.நி.ச.மே.தீ-ஆல் 25.10.2019-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிடப்பட்ட நகல் அவர்களின் வழக்குரைஞரால் 19.12.2019 அன்று பெறப்பட்டுள்ளது.

6. சான்றிடப்பட்ட உத்தரவின் நகலினை 19.12.2019-இல் பெற்றுக்கொண்டதாக மேல்முறையீட்டாளர்கள் ஒப்புக்கொண்டபோதிலும், அவர்கள் தே.நி.ச.மே.தீ-ன் முன்பாக 20.07.2020 அன்று சட்டப்பூர்வ மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தனர். காலதாமதத்தை மன்னிப்பதற்கான விண்ணப்பத்துடன் சேர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

7. 45 நாட்களுக்கு மேல் காலதாமதத்தை மன்னிப்பதற்கான அதிகாரம் தீர்ப்பாயத்திற்கு இல்லை என்ற காரணத்தின்பேரில், காலதாமதத்தை மன்னிக்கக் கோரும் விண்ணப்பத்தை, 04.08.2020 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் தள்ளுபடி செய்தது. அதைத் தொடர்ந்து, மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கால தாமதத்தை மன்னிக்கக் கோரும் விண்ணப்பம் மற்றும் மேல்முறையீடு ஆகிய இரண்டையுமே தள்ளுபடி செய்ததற்கு எதிராக மேல்முறையீட்டாளர்கள் தற்போதைய மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தனர்.

8. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக கற்றறிந்த வழக்குரைஞர் எழுப்பிய வாதம் இரு காரணங்களாலானது அதாவது (i) நிறுமச் சட்டம், 2013, பிரிவு 421 (3)-ற்கு மாறாக தே.நி.ச.மே.தீ-ன் உத்தரவின் தேதியிலிருந்து கால வரையறையைக் கணக்கிடுதலில் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் பிழை புரிந்துள்ளது மற்றும் (ii) பொது முடக்கத்தையும் மற்றும் 15.03.2020 முதல் மேல் உத்தரவு வரும் வரை வழக்கு தாக்கல் செய்வதற்கான வரையறை காலத்தை நீட்டித்து தாமாக முன்வந்து எடுத்த நீதிப்பேராணை மனு (உ)

எண்.3/2020-இல் 23..02.2020 தேதியன்று இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையும் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் பரிசீலிக்கத் தவறிவிட்டது.

9. நாம் தற்போது வாதங்களின் சரித்தன்மையை ஒன்றன் பின் ஒன்றாக ஆய்வு செய்யலாம்.

வாதுரை - I

10. பிரிவு 420 (1)-ன்கீழ் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு உத்தரவின் நகலையும் சம்பந்தப்பட்ட எல்லா நபர்களுக்கும் தே.நி.ச.மே.தீ அனுப்ப வேண்டும் என்பதை நிறுமச் சட்டம், 2013 பிரிவு 420 (3) கட்டாயமாக்குகிறது. பிரிவு 420 (3) கீழ்க்கண்டவாறு :

> **"420. தீர்ப்பாயத்தின் உத்தரவுகள் -**
>
> (1) xxxx
>
> (2) xxxx
>
> (3) இந்தப் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு உத்தரவின் நகலையும், சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தீர்ப்பாயம் அனுப்பவேண்டும்."

11. சான்றிடப்பட்ட இறுதி உத்தரவின் நகல்களை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு இலவசமாக தே.நி.ச.மே.தீ-ன் பதிவகம் அனுப்பவேண்டும் என தேசிய நிறுமச் சட்ட தீர்ப்பாய விதிகள், 2016-இல் விதி 50 கூறுகிறது. இருப்பினும், பிற வழக்குகளில் (வழக்கு தரப்பினர்களாக இல்லாதவர்கள் என்பது பொருள்) கட்டண அட்டவணைப்படி

செலவுடன் சான்றிடப்பட்ட நகல்கள் வழங்க தே.நி.ச.மே.தீ-ன் பதிவகத்திற்கு விதி 50 வகை செய்கிறது. விதி 50 கீழ்க்கண்டவாறு :

> **"50. பதிவகம் சான்றிடப்பட்ட நகல் அனுப்ப.** - தொடர்புடைய தரப்பினர்களுக்கு இறுதி உத்தரவின் சான்றிடப்பட்ட நகலை பதிவகம் இலவசமாக அனுப்ப வேண்டும், மற்ற எல்லா வழக்குகளிலும், கட்டண அட்டவணைப்படி சான்றிடப்பட்ட நகல் வழங்கிடப்படலாம்."

12. தே.நி.ச.மே.தீ-ன் உத்தரவிற்கெதிராக மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யும் பரிகாரத்தின் பிரிவு 421 (1) வகை செய்கிறது. பிரிவு 421 உட்பிரிவு (3), மேல்முறையீட்டை தாக்கல் செய்வதற்கான வரையறை காலத்தை நிர்ணயிக்கிறது மற்றும் அதன் கீழுள்ள வரம்புரை, காலதாமதத்தை மன்னிப்பதற்காக மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு விருப்புரிமையின் வரம்பை உறுதி செய்கிறது. பிரிவு 421 உட்பிரிவு 3 உடன் அதன் கீழுள்ள வரம்புரை பின்வருமாறு :

> **"421. தீர்ப்பாயத்தின் உத்தரவு மீது மேல்முறையீடு** -
>
> (1) xxxx
>
> (2) xxxx
>
> (3) உட்பிரிவு (1)-ன் கீழான அனைத்து மேல்முறையீடும், பாதிக்கப்பட்ட நபருக்கு தீர்ப்பாயத்தின் உத்தரவின் நகல் கிடைக்கப்பெறும் தேதியிலிருந்து 45 நாள்களுக்குள் உட்பிரிவு

(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட வேண்டும், அது வகுத்துரைக்கப்பட்டுள்ளபடியான அத்தகைய கட்டணத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

வரம்புரையாக :- மேற்சொன்ன நாளிலிருந்து வரம்புரை காலமான நாற்பத்தைந்து நாள்கள் முடிவடைந்த பின்னர், மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அதை ஏற்கலாம், எனினும், அந்த காலகட்டத்திற்குள் மேல்முறையீட்டை தாக்கல் செய்வதிலிருந்து போதுமான காரணத்தினால் மேல்முறையீட்டாளர் தடுக்கப்பட்டார் என்று மனநிறைவடையும் பட்சத்தில் நாற்பத்தைந்து நாள்களுக்கு மிகாமல் உள்ள காலத்திற்குள் அது தாக்கல் செய்யப்படவேண்டும்."

13. எனவே, பாதிக்கப்பட்ட நபருக்கு தீர்ப்பாயத்தின் உத்தரவின் நகல் கிடைக்கப்பெறும் நாளிலிருந்தே பிரிவு 421 (3)-ன்கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாள்களுக்கான வரையறைக் காலமானது தொடங்கும் என்ற மேல்முறையீட்டாளர்களின் வாதம் மெய்யானது. சட்டத்தின் பிரிவு 420 (3) உடனிணைந்த விதி 50-ன்படி, மேல்முறையீட்டாளர்கள் செலவின்றி ஒரு சான்றிடப்பட்ட உத்தரவின் நகல் வழங்கப்பட உரிமையுடையவர்கள் என்பது உண்மை.

14. எனவே, மேல்முறையீட்டாளர்கள் நகல் மனுதாக்கல் செய்யாமல், ஆனால் பிரிவு 420 (3) உடனிணைந்த விதி 50-ன் வரையறைகளின் படி, உத்தரவின் இலவச

நகலுக்காக காத்திருந்தால், காலவரம்பு ஆரம்பிக்கும் நாளை நிர்ணயிக்க, பிரிவு 421 (3) சார்ந்திருப்பது சரியானதாக இருந்திருக்கும். ஆனால், இவ்வழக்கின் மேல்முறையீட்டாளர்கள், அவர்கள் முன்பு உத்தரவு பகரப்பட்ட நாளிலிருந்து 27 நாள்களுக்குப் பின்னர் சான்றிடப்பட்ட நகலுக்கு விண்ணப்பித்துள்ளனர் மற்றும் அவர்கள் தற்போது பிரிவு 421(3)-ஐ சார்ந்து உள்ளனர் என்பதாகும்.

15. மேற்சொன்ன சங்கதிகளின் நிலைப்பாட்டிற்கு அப்பால், அவர்கள் 25.10.2019 முதல் (தே.நி.ச.தீ உத்தரவு நாள்) 21.11.2019 வரை நகல் கேட்டு விண்ணப்பிக்க காத்திருந்ததை மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக நாங்கள் முடிவு செய்ய விரும்பவில்லை. ஆனால், மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞரால் சான்றிடப்பட்ட நகல் பெற்றுக்கொண்டதாக ஒப்புக்கொண்ட நாளான 19.12.2019-லிருந்து காலவரம்பு தொடங்குவதை நிறுத்த இயலாது.

16. மேல்முறையீட்டாளர்களின் வழக்குரைஞர் உத்தரவின் நகலைப் பெற்றுக்கொண்ட நாளான 19.12.2019-லிருந்து, மேல்முறையீடு தாக்கல் செய்ய மேல்முறையீட்டாளர்களுக்கு 45 நாள்கள் கால அவகாசம் உள்ளது. அந்தக் கால அவகாசம் 02.02.2020 உடன் முடிவடைகிறது.

17. பிரிவு 421 (3)-இல் உள்ள வரம்புரை காரணமாக, 45 நாள்கள் காலம் வரை தாமதத்தை மன்னிக்க மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 45 நாள்கள் காலவரம்பு 02.02.2020-லிருந்து துவங்குகிறது மற்றும் மேல்முறையீட்டாளர்களின் கருத்துப்படி அது 18.03.2020 உடன் முடிவடைகிறது.

மேல்முறையீட்டாளர்கள் 18.03.2020 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை, ஆனால் 20.07.2020-இல் தான் தாக்கல் செய்துள்ளார். பொதுமுடக்கம் 24.03.2020 அன்றுதான் போடப்பட்டது. 18.03.2020 அன்று அல்லது அதற்கு முன்னர் மேல்முறையீட்டாளர்கள் மேல்முறையீடு தாக்கல் செய்ய எந்தத் தடையுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இடர்பாட்டை கடக்க, இந்நீதிமன்றத்தின் 23.03.2020 தேதியிடப்பட்ட உத்தரவை மேல்முறையீட்டாளர்கள் சார்ந்துள்ளனர். இது, மேல்முறையீட்டாளர்களின் இரண்டாவது வாதத்திற்கு எங்களை இட்டுச் செல்கிறது.

<u>வாதுரை - 2</u>

18. 18.03.2020 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேல்முறையீடு தாக்கல் செய்யத் தவறியதை சரிக்கட்ட இந்நீதிமன்றம் தாமாக முன்வந்து எடுத்த நீதிப்பேராணை மனு (உ) எண்.3/2020-இல் 23.03.2020 தேதியிடப்பட்ட உத்தரவை மேல்முறையீட்டாளர்கள் சார்ந்துள்ளனர். அது பின்வருமாறு :

> "காலவரம்பு பொதுச்சட்டம் அல்லது சிறப்பு சட்டம் (மத்திய மற்றும் மாநிலம்) கீழ் அல்லது காலவரம்பு பொது சட்டம் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் நாடு முழுதும் அவர்களது மனுக்கள்/விண்ணப்பங்கள்/வழக்குகள்/மேல்முறையீடுகள்/பிற எல்லா நடவடிக்கைகளிலும் நாடு முழுதும் சந்திக்கும் நிலைமை

குறித்து இந்நீதிமன்றம் தாமாகவே முன்வந்து வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

அத்தகைய கஷ்டங்களை போக்கவும் இந்நீதிமன்றம் உட்பட நாடு முழுவதும் உள்ள சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்களில் அத்தகைய நடவடிக்கைகளை தாக்கல் செய்வதற்கு நேரடியாக வர தேவையில்லை என்று வழக்குரைஞர்கள்/வழக்காடிகளுக்கு உறுதி செய்ய, பொதுச்சட்டம் அல்லது சிறப்பு சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள காலதாமதத்தை பொருட்படுத்தாமல், அத்தகைய எல்லா நடவடிக்கைகளிலும் காலவரம்பு என்பது தற்போதைய வழக்கு நடவடிக்கையில், இந்நீதிமன்றத்தால் மேலும் உத்தரவு/கள் பிறப்பிக்கப்படும்வரை 15.03.2020-லிருந்து அது நீட்டிக்கப்படாது என்று இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நாங்கள், இந்திய அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 142 உடனிணைந்த பிரிவு 141-ன்கீழ் அதிகாரத்தை செலுத்தில், வகுமுறைக்கூறின் வரையறைக்குட்பட்டு எல்லா நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்கள் மற்றும் அதிகார அமைப்புகளும் இந்த உத்தரவால் கட்டுப்படுத்தப்படுகின்றன என அறிவிக்கின்றோம்.

தங்கள் வரம்புக்குட்பட்ட எல்லா சார்பு நீதிமன்றங்கள்/தீர்ப்பாயங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பிட, எல்லா உயர்நீதிமன்றங்களின் கவனத்திற்கு இந்த உத்தரவு கொண்டுவரப்படுகிறது.

4 வாரங்களுக்குள் பதிலளிக்கும் வகையில் எல்லா உயர்நீதிமன்ற தலைமைப் பதிவாளர்களுக்கும் அறிவிப்பு அனுப்ப வேண்டும்."

19. ஆனால், மேற்சொன்ன உத்தரவின் கீழ் மேல்முறையீட்டாளர்கள் சார்ந்து நிற்பார்கள் என்று நாங்கள் கருதவில்லை. **இந்நீதிமன்றத்தின் மேற்சொன்ன உத்தரவில் நீட்டிக்கப்பட்டது என்னவென்றால் "காலவரம்பு" மட்டுமே மற்றும் சட்டத்தால் உறுதி செய்யப்பட்ட விருப்புரிமையைச் செலுத்துவதில் காலதாமதத்தை மன்னிக்கும் காலத்தையல்ல.** பொது மற்றும் சிறப்பு சட்டங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் நடவடிக்கை தொடர்வதிலிருந்து பெருந்தொற்று மற்றும் பொதுமுடக்கம் காரணமாக தடுக்கப்பட்ட விழிப்புடன் உள்ள வழக்காடிகளுக்கு பயனளிக்கும் விதமாக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மேற்படி உத்தரவு உள்ளது. காலவரையறைச் சட்டம் என்பது இரு லத்தீன் சட்ட முதுமொழியின் அடிப்படையில் அமைந்துள்ளது என்றும், அதில் ஒன்று 'Vigilantibus Non Dormientibus Jura Subveniunt' அதன் பொருளானது, 'விழிப்புடன் இருப்பவர்களுக்கு மட்டுமே சட்டம்

உதவும், தங்களது உரிமைகளை குறித்து கருத்தில் கொள்ளாமல் இருப்பவர்களுக்கு அல்ல' என்பதாகும்.

20. இவ்விஷயத்தில், பொது வகையங்கள் விளக்கச் சட்டம், 1897 பிரிவு 10-ஐ குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும். அது கீழ்க்கண்டவாறு :

> **"10. காலத்தைக் கணக்கிடுதல்** - (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டம் அல்லது ஒழுங்குறுத்தும்விதி எதனாலும், குறித்தொருநாளில் அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஒரு கால அளவுக்குள், நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலும், செயல் எதுவும் செய்யப்படவேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து அந்த நாளன்று அல்லது வகுத்துரைக்கப்பட்ட கால அளவில் கடைசி நாளன்று, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் மூடப்பட்டிருக்குமாயின், அந்தச் செயல் அல்லது நடவடிக்கை, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலகம் திறக்கப்பட்டதற்குப் பின்பு அடுத்த நாளன்று செய்யப்பட்டிருக்குமாயின், அல்லது எடுக்கப்பட்டிருக்குமாயின், அது உரிய காலத்தில் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக : எந்தச் செயல் அல்லது நடவடிக்கைக்கு இந்தியக் காலவரம்புச் சட்டம், 1887 (15/1877) பொருந்துகிறதோ அந்தச் செயல் அல்லது நடவடிக்கை எதற்கும் இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பொருந்தாது.

(2) இந்தப் பிரிவு, 1887, ஜனவரி பதினான்காம் நாளன்று அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட மையச் சட்டங்கள் அல்லது ஒழுங்குறுத்தும் விதிகள் அனைத்திற்கும் கூடப் பொருந்தும்."

21. பொது வகையங்கள் விளக்கச் சட்டம் பிரிவு 10(1) அடிப்படையில் அமைந்துள்ள கோட்பாடுகள், காலவரையறை சட்டம், 1963 பிரிவு 4-லும் இடம் பெற்றுள்ளது. அது பின்வருமாறு :-

"4. நீதிமன்றம் அடைக்கப்பட்டிருக்கும் பொழுது வகுத்துரைக்கப்பட்ட காலம் முடிவடைதல். - நீதிமன்றம் அடைக்கப்பட்டுள்ள நாளொன்றில் வழக்கு, மேல்முறையீடு அல்லது மனு எதற்காகவும் வகுத்துரைக்கப்பட்ட காலம் முடிவடைகிறவிடத்து, அவ்வழக்கு, மேல்முறையீடு அல்லது மனு அந்நீதிமன்றம் மீண்டும் திறக்கின்ற அதே தேதியின் பொழுது தொடுக்கப்படலாம், முன் கொணர்ந்திடலாம் அல்லது செய்து கொள்ளலாம்.

விளக்கம் : அதன் இயல்பான அலுவல் வேளையின் பகுதி எதன்பொழுதும் அதே நாளில் அது அடைக்கப்பட்டுள்ளதாய் இருப்பின் இப்பிரிவின் பொருளமைவில் நாள் எதிலும் நீதிமன்றமொன்று அடைக்கப்பட்டுள்ளதெனக் கருதப்பட வேண்டும்."

22. "நிர்ணயிக்கப்பட்ட காலம்" என்ற சொற்றொடர் காலவரையறை சட்டம் 1963-இல் பல பிரிவுகளில் காணப்படுகிறது. இந்த சொற்றொடர்களை "நிர்ணயிக்கப்பட்ட காலம்" என்பது காலவரையறை சட்டம் 1963 பிரிவு 2-இல் வரையறுக்கப்படவில்லை, அந்த சொற்றொடர்கள் காலவரையறையை குறிக்க மட்டுமே முழுதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் சில உதாரணங்களைப் பார்க்கலாம் :-

(i) பிரிவுகள் 4 முதல் 24 வரையில் உள்ள வகையங்களுக்கு உட்பட்டு பிரிவு 3(1)-ன்கீழ் வகுத்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்கு பின்னர் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு தள்ளுபடி செய்வதற்குரியது.

(ii) நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு பின் எந்த மேல்முறையீடு அல்லது மனு அனுமதிக்க பிரிவு 5 வகை செய்கிறது.

(iii) சட்ட முடக்கத்தின் கீழ் உள்ள நபர்களால் செய்யப்படும் நடவடிக்கைகள் குறித்த நிர்ணயிக்கப்பட்ட காலம் என்ற சொற்றொடரை பிரிவு 6 பயன்படுத்துகிறது.

23. பிரிவு 4-இல் காணப்படும் "நிர்ணயிக்கப்பட்ட காலம்" என்ற சொல் காலவரம்பைத் தவிர வேறு எதனையும் பொருள் கொள்வதாக கருதமுடியாது. நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பைத் தாண்டி, அதில் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம், நடவடிக்கை தொடர ஒரு நபரை அனுமதிக்க விருப்புரிமை வைத்திருப்பதாக "நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பாக" கருதமுடியாது.

24. **அசாம் நகர்ப்புற நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் -எதிர்- சுபாஷ் ப்ராஜெக்ட்ஸ் மற்றும் மார்க்கெட்டிங் லிமிடெட்** (2012) 2 **எஸ்.சி.சி** 624 என்ற வழக்கில் 'நிர்ணயிக்கப்பட்ட காலம்' என்ற சொற்றொடரின் வரையறை குறித்து பத்தி 13 மற்றும் 14-இல் இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு விவாதித்துள்ளது :-

> "13. 1963 சட்டம் பிரிவு 4-இல் முக்கியமான சொற்றொடர்கள் "நிர்ணயிக்கப்பட்ட காலம்". அந்த சொற்றொடர்கள் பொருள் என்ன"
>
> 14. 1963 சட்டம் 2 (j) பின்வருமாறு வரையறை செய்யப்பட்டுள்ளது"
>
> "2(j) 'காலவரம்பின் அளவு' என்பது ஓர் உரிமை வழக்கு, மேல்முறையீடு அல்லது விண்ணப்பம் எதற்காகவும் இணைப்புப் பட்டியலில் விதித்துரைக்கப்பட்டிருக்கிற காலவரம்பு அளவாகும் என்று பொருள்படும்: மற்றும் 'விதித்துரைக்கப்பட்டிருக்கிற கால அளவு' என்பது, இந்தச் சட்ட வகையங்களுக்கு இணங்கக்

கணக்கிடப்படுகிற காலவரம்பின் அளவாகும் என்று பொருள்படும்.

1963, சட்டம் பிரிவு 2(j)-ஐ, 1996 சட்டம் பிரிவு 34(3) உடனிணைந்து வாசித்தால் இசைவுத் தீர்வத்தை நீக்கறவு செய்வதற்கு விண்ணப்பிக்க வகுத்துரைக்கப்பட்ட காலமானது மூன்று மாதங்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. 1996 சட்டம் பிரிவு 34 உட்பிரிவு 3-ஐ பின்தொடர்ந்து, வரம்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள 30 நாள்கள் என்பது "வரையறுக்கப்பட்ட காலம்" அல்ல, எனவே, இசைவுத் தீர்வத்தை நீக்கறவு செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கான வரையறை காலம் குறிப்பிடப்படவில்லை. 1996 சட்டம், பிரிவு 34 உட்பிரிவு 3-ன்கீழ் வரம்புரையில் போதுமான காரணம் காட்டப்பட்டு, 3 மாதங்களுக்கு மேல் 30 நாள்கள் நீதிமன்றத்தால் நீட்டிக்கப்படலாம், அது "கால வரையறை" இல்லாதது அல்லது வேறொரு சொற்றொடரில் "நிர்ணயிக்கப்பட்ட காலம்" என்பதால் எங்களது கருத்துப்படி, 1963 சட்டம் பிரிவு 4 இந்த வழக்கின் சங்கதிகளால் ஈர்க்கப்பட இயலாதது."

25. எனவே, காலதாமதத்தை மன்னிக்க கூடிய காலத்தை நீட்டிப்பதற்காக, இந்நீதிமன்றத்தால் 23.03.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பலனை,

மேல்முறையீட்டாளர்கள் கோரமுடியாது. எனவே, இரண்டாவது வாதம் ஏற்புடையதல்ல. எனவே, மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்படவேண்டியவை. அதன்படி அவை தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".